பாடம் – 5

# பேதலிப்பு
# (ALLIENATION)

## 5.1 முன்னுரை

இப்பாடம் பேதலிப்பு என்பது பற்றியும் அரசியல் பேதலிப்பு பற்றியும் தெரிந்து கொள்வதற்காக எழுதப்பட்டதாகும். இக்கோட்பாடு மூன்று வழிகளில் பயன்படுத்தப்படுகின்றது. பேதலிப்பு என்ற வார்த்தை எப்போது உருவானது மற்றும் அரசியல் பேதலிப்பு அதன் தொடர்புடைய கருத்துக்களைப் பற்றிக் கூறுவது மற்றும் பேதலிப்புப் பற்றிய அரசியல் அறிஞர்கள் கருத்து ஆகியவை இடம்பெற்றுள்ளது.

## 5.2 நோக்கங்கள்

இந்தப் பாடத்தை முற்றிலும் படித்து முடித்தப் பின் பின்வருவனவற்றைப் பற்றி தெளிவாக அறிந்துக் கொள்ள முடியும்.

- பேதலிப்பின் பொருள் மற்றும் இயல்பு
- மார்க்ஸ் மற்றும் வீபர் போன்றோரின் பேதலிப்புக் கோட்பாட்டுக் கருத்துகள்
- பேதலித்தலின் காரணங்கள்

பாட அமைப்பு

5.1 முன்னுரை
5.2 நோக்கங்கள்
5.3 பாட அறிமுகம்
5.4 அரசியல் பேதலிப்பு – இயல்பு
5.5 பேதலித்தலும், கொள்கையும்
5.6 மார்க்சியக் கோட்பாடு
5.7 விமர்சனங்கள்
5.8 தொகுப்புரை
5.9 முக்கியச் சொற்கள்
5.10 தன்மதிப்பீட்டு விடைகள்
5.11 மாதிரி வினாக்கள்

Scanned with CamScanner

## 5.3 பாட அறிமுகம்

பேதலிப்பு என்ற கோட்பாடு சமூகவியலில் 'அதிகாரம்', 'செயல்' ஆகியவற்றில் கவனம் செலுத்தாத நிலையில் இருப்பதைப் பற்றிய கருத்தியலாகும். இது அரசியல் 'பேதலிப்பு' என்ற நிலையில் வந்தபோது 'பங்கேற்பின் அளவாக' மதிப்பிடப்பட்டது. எனவே இப்பாடம் சமூகம் மற்றும் அரசியலில் பயன்படுத்தும் பேதலிப்பு பற்றிக் கூறுவது இதன் நோக்கம். மாக்சு வீபர், கார்ல் மார்க்சு ஆகியோர்களின் கருத்து விரிவாக விளக்கப்பட்டுள்ளது.

## 5.4 அரசியல் பேதலிப்பு – இயல்பு

அரசியல் பேதலிப்பு என்பது இன்று தத்துவம், உளவியல், சமூகவியல் ஆகிய பாடங்களில் நடைமுறைக் கோட்பாடாகத் திகழ்ந்து வருகின்றது. அரசியல் சட்டப்பூர்வம் மற்றும் அரசியல் பேதலிப்பு என்ற கோட்பாடுகள் இன்று முக்கியத்துவம் பெற்று வருகின்றன. உளவியலர்களான சிக்மன்ட் ப்ராய்டு, மார்க்ஸ் வீபர், ஹெகல் போன்ற தத்துவ ஞானிகள், டால்காட் பார்சன்ஸ், டேவிட் ரீஸ்மேன், சிம்மல், நாதன் கிளாசர் போன்ற சமூகவியலர்கள், மார்க்ஸ், எங்கல்ஸ் போன்ற சமூகப் பொருளாதாரவாதிகள், சார்டயர் ஜேஸ்பர் போன்ற நிலைத் தன்மைக் கோட்பாட்டாளர்கள் அரசியல் பேதலிப்பு பற்றி ஆய்ந்துள்ளனர்.

அரசியல் பேதலிப்பு என்பதற்கு பலவகைகளில் விளக்கம் கூறுகின்றனர். தனிமை, விலகி இருத்தல், மனவேறுபாடு, பற்றின்மை, கவனமின்மை, அசட்டை மனப்பான்மை, எதிலும் நாட்டமின்மை போன்ற வகைகளில் விளக்கம் கூறுவர். அதாவது சமூகம், மதம், நிர்வாகம் மற்றும் தன்னிலையிலிருந்து விலகி இருப்பர். இதை பேதலிப்பு என்பர். மனவேறுபாடு அல்லது தனது முழு ஆளுமைத் தன்மையில் (personality) இருந்து பிரிந்து இருத்தல் மற்றும் உலக அறிவோடு ஒத்து இல்லாதிருத்தல் என குர்ல் லாங் விவரித்துள்ளார்.

நிறுவனச் செயல்களில் எதிர்பார்க்கும் பங்கினை வழங்காவிட்டால், நிறுவனப் பணியாளர்கள் பேதலிப்பு நிலைக்கு வந்து விடுவார்கள். மனிதன் தன்னுடைய ஆற்றலைப் பயன்படுத்த முடியாத ஒரு நிலை ஏற்பட்டால், மனிதாபிமான சமூகம் ஏற்பட இடையூறு ஏற்பட்டால் பேதலிப்பு என்பது ஏற்படும். எனவே பேதலிப்பு பற்றி பல பாடங்களில் கூறப்பட்டுள்ள கருத்துக்கள் சிலவற்றைக் காண்போம்.

1. தத்துவ ரீதியில் பேதலிப்பு என்பதை ஹெகல் மற்றும் ப்யூபர்பாக் இலட்சிய நோக்கில் விவரிக்கின்றனர். மதம் மற்றும் ஆன்மீகம் ஆகியவற்றிலிருந்து மனிதனின் மனவேறுபாடு பேதலிப்பு என்கின்றனர்.

Scanned with CamScanner

2. பிராய்டு மற்றும் மார்க்ஸ் வீபர் ஆகியோர்களின் உளவியல் ரீதியில் இயலாதநிலை, அதிகாரமில்லாத தன்மை, தன்னையே வெறுக்கும் நிலை, எதுவும் உதவாத பயனில்லாதவன், யாரும் தங்களை பொருட்டாக அங்கீகரிக்கவில்லை என தங்களை மனிதனாக மதிக்கவில்லை என பேதலித்தலை வர்ணிக்கின்றனர்.

3. சிம்மல், பார்சன் ஆகியோர் மார்க்சின் கருத்தை ஆதரித்து, புதிய கோணத்தில் பேதலித்தலை விளக்குகின்றனர். மன வேறுபாடு என்பதற்குப் பதில் கருத்திற்கு உருக்கொடுத்தல் என்றவாறு தங்கள் கருத்துக்களை அமைத்துள்ளனர். ஆதிக்க சமூகம் மனிதன் வாழ்வு நிலையிலிருந்து விலகி, தங்களுடைய பாட்டாளிகளோடு கூட சேர்ந்து இருக்க விடாது, பொருளாதார நடவடிக்கைகளில் விலகி இருக்கும்வண்ணம் வர்க்கப் போராட்டம் நடைபெற்றுக் கொண்டே இருக்கின்றதென மிகவும் வருத்தமாகக் கூறுகின்றார். இதனையே பிளானர் என்பார் பேதலிப்பு என்பது, பொருளற்றது, அதிகாரமில்லாதது, நெறியில்லாதது, தனிமை மற்றும் மனவேறுபாடு எனக் கூறுகின்றார். உற்பத்தியும், வேலைப் பங்கீடும், பாட்டாளி வர்க்கப் பங்கினை மிகவும் குறைத்து விட்டதெனச் சமூகவியலர்கள் கருத்துத் தெரிவிக்கின்றனர்.

4. பொருளாதார ரீதியான பேதலிப்பு கருத்து மார்க்ஸ் கூறியதாவது முதலாளித்துவ முறையின் அடிப்படை கெடுதல் பாட்டாளி வர்க்கத்தை முதலாளிகள் சுரண்டுவதாகும். எனவே பாட்டாளி தனது வாழ்க்கை முறையிலிருந்து விலகி விடுகிறான். முதலாளி சுரண்டலின் காரணமாக மிகை மதிப்பு பெறுகிறான். எனவே மூலதனம் என்பதிலிருந்து பாட்டாளி விளகி விடுகிறான். பாட்டாளி உயிர் வாழ்வதற்கு மட்டுமே உழைப்பை நல்கின்றான். தனது ஆக்கப் பூர்வ அறிவாற்றல் கட்டுப்பட்டு விடுகின்றது. மார்க்ஸ் பொருளாதாரச் சுரண்டலை, பொருள் விளக்க பேதலித்தலைத் தெளிவாகக் கூறுகின்றார்.

எனவே, பேதலிப்பு சமூகவியல், உளவியல், பொருளாதாரம், தத்துவம், அரசியல் ஆகிய எல்லாப் பாடங்களிலும் இடம் பெற்றுள்ளது என்பதை அறியலாம்.

## 5.5 பேதலிப்புக்கும், கொள்கையும்

பேதலிப்புக்கும், கொள்கைக்குமுள்ள வித்தியாசங்களைக் காண்போம். முதலாவதாக, அரசியல் அதிகாரமின்மையென்பது அரசாங்கத்தின் நடவடிக்கைகளைக் கட்டுப்படுத்தவோ அல்லது ஒழுங்குப்படுத்த முடியாத ஒரு நிலையைக் குறிப்பதாகும். சமூகப் பிரச்சனைகளைத் தீர்க்கவல்ல அரசியல் நடவடிக்கைகளில் பங்கு பெற்று, மாற்றம் செய்ய இயலாத நிலை அரசியல் அதிகாரமின்மையாகும். அரசியல் முடிவுகள் தான் சமூகப் பிரச்சனைகளுக்குத் தீர்வு காணக் கூடியது. அப்பேற்பட்ட அரசியல் முடிவுகள் எடுக்க ஆற்றல் படைத்த செல்வாக்கு படைத்தவர்கள் யார் என்பதை வாக்காளர் நடத்தைப் படிப்பின் மூலம் தெரிந்து கொள்ளலாம். வாக்காளர் நடத்தை அரசியல் திறமையாளர்களை அடையாளம் காட்டக் கூடியது. இதன் மூலம் யார் அதிகார மில்லாதவர்கள் என்பதையும் அடையாளம் கண்டு கொள்ளலாம்.

Scanned with CamScanner

இரண்டாவதாக, அரசியலில் இருப்பதே அர்த்தமற்றது என்ற நிலையும் அரசியல் பேதலிப்புதான். ஏனெனில் அரசியல் முடிவுகள் அனைத்தும் நாம் நினைத்துக் கூடப் பார்க்க முடியாததாக வந்து விட்டால், அரசியல் முறைமையை நாம் சரியாகத் தெரிந்து கொள்ளவில்லை என்று பொருள். ஏனெனில் இதில் அரசியல் பங்கேற்பாளர்களின் பங்கு ஒன்று கூட இல்லை என்று எண்ணத் தோன்றும். எனவே தனி நபர்கள் பங்கேற்பிற்குப் பயனில்லாமல் இருப்பது, அரசியல் பேதலிப்பு.

மூன்றாவதாக, அரசியல் ஒதுக்கம் அல்லது தனியாக நிற்றல் என்றால் சமூகத்திலுள்ள அனைவரும் ஏற்றுக் கொண்டு, செயல்படுத்தி வரும் அரசியல் நெறிகள் மற்றும் குறிக்கோள்களை வெறுத்து, தள்ளுபடி செய்து, தனியாக நின்று செயல்படுவதாகும். இப்பேற்பட்ட அரசியல் ஒதுக்கம் கொண்டவர்கள், வாக்களித்தல் போன்ற கட்டாய அரசியல் கடமைகளைக் கூட ஏற்றுக் கொள்ளாது, அதனை ஒரு சடங்காகவே கருதுவர். ஏனெனில் அரசியல் பங்கு பெறல் என்பது கூட கொள்கை உருவாக்கத்திற்கு அவசியமானது என்று கூடக் கருதமாட்டார்கள். ஏனெனில் இவர்கள் அரசியல் செயல்பாடுகள், அதற்குரிய விதிமுறைகள் போன்றவை சரியானவை அல்லவென்றும், சுமையான ஒரு செயல் என்றும், சட்ட விரோதமானது என்றும் கூறுவர் என லாங் விவரித்துள்ளார். சமூக நெறிகள் முக்கியமானதென்றும், மாறக் கூடியதென்றும் அரசியல் பேதலிப்பு கொண்டவர்கள் கூறுவர். சமூக நெறிகள் என்பதுவும் கலாச்சாரத்திற்கு கலாச்சாரம் வேறுபட்டதென்றும், ஒரு குறிப்பிட்ட சமூகத்தின் நெறிமுறையை வைத்துத்தான் அரசியல் பேதலிப்பின் தன்மையைக் கணிக்க முடியும்.

நான்காவதாக, மன வேறுபாடு என்று கூறுவதில், மக்களுடைய பொதுவாழ்வே distorted ஆக உள்ளது. அரசியல் நடவடிக்கைகளில் ஈடுபட முடியாத நிலைக்கு மக்கள் ஆளாக்கப்படுகின்றனர். உதாரணமாக, வாக்களித்தல் என்ற செயலில் குடிமகன் வாக்களிக்கும் இயந்திரமாக, ஒரு பொருளாக ஒரு சாதனமாகவே கருதப்படுகிறானே தவிர, அவன்தான் அரசியல் தலைவிதியை நிர்ணயிக்கிறான் என்ற நிலை இல்லாமல் போய் விடுகிறது. அதாவது, ஒரு பொருளை விற்கும் விற்பனைப் பிரதிநிதியான ஒரு பெண் அந்தப் பொருளுக்காக தன்னை அர்ப்பணிப்பது போல் மாறி விடுகிறது. பணி செய்பவர்கள் கூலிப் பணியாளர்களாகவும், பணியானது தங்களை மேம்படுத்திக் கொள்ளவும், தங்களது திறனை வளர்த்துக் கொள்ளும் ஆக்கப்பூர்வ ஆற்றல்களுக்கு இடமில்லாது போய் விடுகின்றது. வாக்காளர் தனது வாக்களிப்பிற்குப் பின், தன் வாக்கினால் உருவான அரசாங்கத்திற்கும், இவனுக்கும் தொடர்பில்லாது போய் விடுகிறது.

## 5.6 மார்க்சியக் கோட்பாடு

மார்க்ஸ் பேதலிப்பு கருத்தை ஹெக்லிடமிருந்து எடுத்தாண்டுள்ளார். ஆனால் ஹெகல் கூறும் பேதலித்தலும், மார்க்ஸ் பேதலித்தலும் வித்தியாசமானவை. எதிர்ப்புத் தன்மை மற்றும் பேதலிப்பு ஆகிய இரண்டையும் ஒன்றாகக் கருதுகிறார். ஆனால் மார்க்சு இதை ஏற்கவில்லை, இரண்டு ஒன்று சேரத்தக்கதல்ல என்கிறார். எதிர்ப்புத் தன்மை என்ற செயல்முறையானது மனிதன்

Scanned with CamScanner

அவசியமானவனாக பிற மக்களுக்கு தேவைப்படக் கூடிய பொருளாக மாற்றி, இவன் சமூகம், இயற்கை ஆகியவற்றில் இல்லாது இவற்றின் வெளி மட்டத்தில் அமையப் பெறக் கூடிய செயல்முறை எதிர்ப்புத் தன்மை செயல்முறையாகும். அதாவது இவன் செயல்கள், இவனுக்குப் பயன்படாது பிறர்களுக்கு பயன்படக் கூடியதே எதிர்ப்புத் தன்மை. இதே போல் பேதலித்தலும், இவன் செயல், அத்தியாவசியமானது, அவனை வழி நடத்தக் கூடியதெனினும் இவன் சமூகம் மற்றும் இயற்கைக்கு வெளியில் இருக்க வேண்டும்.

ஆனால் மார்க்சின் பேதலிப்பு நான்கு தனி அலகுகளைக் கொண்டது. ஒன்று இயற்கை, இரண்டாவது அவனுக்குள்ளேயேயும், மூன்றாவது உடன் பணியாற்றுபவர்கள், நான்காவது சமூகம் ஆகிய நான்கு அலகுகளைக் கொண்டது. முதலாவதாக, முதலாளித்துவம் முழுமையாக மனிதர்களின் உழைப்பிலிருந்து முழுவதும் பேதலிக்கின்றது. உழைப்பாளர் பணியாளர், மனிதன் என்ற நிலை கூடக் கொடுக்கப்படுவதில்லை. மனிதனின் தனது பணியான உழைப்பிலிருந்தும், இவன் உற்பத்தி செய்த உற்பத்திப் பொருளிலிருந்தும் வேறுபடுவதுடன், இவன் செய்த உற்பத்திப் பொருளுக்கும், இவனுக்கும் தொடர்பில்லாது போய் விடுகின்றது. இவனுடைய உழைப்பு அந்த உற்பத்திப் பொருளுக்குத்தான் என்ற நிலை மாறி, உற்பத்திப் பொருள் மேலோங்க இவனும், இவனது உழைப்பும் வேறாகி விடுகின்றது. தவிர, அதிகமாக உற்பத்தி செய்தால் இவன் பேதலித்தலும் அதிகமாகி விடுகின்றது. இவனால் உற்பத்தி செய்த பொருள் மட்டுமல்ல, பொருள் அதிகமாகிக் கொண்டேயிருந்தால் இவனுடைய மதிப்பும், பணியும் மிகமிகக் குறைந்த அளவிலேயே மதிக்கப்படுகின்றது. பொருளை உருவாக்கும் இயந்திரமாகி விடுகிறான்.

சுருங்கக் கூறின், முதலாளித்துவத்தில் வேலைச் செயல்முறை பெரும்பாலும் பேதலித்தலாகி விடுகிறது. இதற்கு இரண்டு காரணங்களாகும். அவை :

1. உழைப்பாளி தனது உழைப்பை முதலாளிக்கு விற்பனை செய்து விடுகிறார். எனவே உற்பத்தி தொடர்பான செயல்கள் அனைத்தும் உழைப்பாளியிடமிருந்து பேலித்து விடுகிறது. எனவே உற்பத்திப் பொருள், முதலாளியின் சமூக அதிகாரம் உழைப்பாளிக்கு வேறாகி விடுகிறது.

2. உழைப்பாளி தனது ஆற்றலுக்கேற்ப, ஆக்கப்பூர்வமாக வேலை செய்யப் படுவதில்லை. மாறாக வெளிமட்ட திருப்திக்காகவே வேலை செய்கிறான். தனக்கு திருப்தி தரும் வகையில் வேலை செய்வதில்லை. வேலைச் செயல்முறையின் கட்டுப்பாடு, தொழில் சொந்தம் ஆயின முதலாளியிடம் இருப்பதால், முதலாளிதான், என்ன உற்பத்தி செய்ய வேண்டும் ? எவ்வாறு செய்ய வேண்டும் ? எந்த வழியில் செய்ய வேண்டும் ? அப்பொருளை எப்படி விற்க வேண்டும் ? என்பதையெல்லாம் முடிவு செய்கிறார். தொழில் நுட்பம் பணிப் பாகுபாடு ஆகியனவற்றையும் அவரே முடிவு செய்கிறார்.

Scanned with CamScanner

உழைப்பாளர் தனது வேலையிலும், அதனை வரையறுப்பதிலும் பேதலித்து விடுகிறான். எனவே மார்க்சு காட்டும் அரசியல் பொருளாதாரம் பொதிந்த சிவில் சமூகம் இவ்வாறு அமையும் என அறியவும். தற்கால சமூகத்தில் மக்கள் ஏராளமான குறைகளையும், பகுத்தறிவற்ற நடவடிக்கைகளுக்கும் இடையே தங்கள் வாழ்க்கையை நடத்தக் கூடியவர்களாக உள்ளனர் என மார்க்சு கணிக்கின்றார். உழைப்பாளியின் உற்பத்தியை மட்டுமே கணக்கில் வைக்கின்றதாக தற்கால சமூகத்தின் சிறப்பம்சமாகத் திகழ்கின்றது. ஏற்கனவே கூறியபடி பகுத்தறிவற்ற நடவடிக்கைகள் கொண்டதாக இன்றைய சமூக அமைப்பு முறை அமையப் பெற்றுள்ளது என்கிறார். உழைப்பாளியின் இந்த உழைப்பு தனித்தன்மை கொண்டதாக, மனித வரலாற்றில் தனிக் காரணியாக, வளர்ச்சியைத் தீர்மானிக்கக் கூடிய ஒரு சக்தி என மார்க்சு கூறுகின்றார். முதலாளித்துவ சமூகம் பொருளாதார கட்டமைப்பின்படி ஏற்படுகிறது என்றும், உழைப்பாளர்களுக்குள் உள்ள தொடர்புகள் பேதலிப்பு முறையில் அல்ல என்றும் கூறுகின்றார். எனவே சமூகமானது உற்பத்தி அல்லது உழைப்பாளிகளை மையமாக வைத்து உருவாக்கப்படுகின்றதென்ற கருத்தைத் தெரிவிக்கின்றார். பொருளாதார உழைப்பின் தன்மையை வைத்து சமூக உறவுகள் ஏற்படுகிறதென்றும், சமூக வளர்ச்சி உற்பத்தித் திறனின் அளவை வைத்து தீர்மானிக்கப்பட வேண்டியதென்பதையும் தெரிவிக்கின்றார். மனித வளர்ச்சி என்பதை மனிதனே முடிவு செய்யக் கூடிய செயல் முறை அல்ல என்றும், சமூக உற்பத்தித் திறனை வைத்தே மனித வளர்ச்சி தீர்மானிக்கப்படுகின்றது. அத்தீர்மானம் செய்யும் நேரங்களில் சமூக உறவுகள் என்பதுவும் சேர்ந்தே பரிணமிக்கின்றதென்கிறார்.

வீபரின் பேதலிப்பு மார்க்சிலிருந்து வேறுபடுகின்றது. முதலாளி வர்க்கத்திற்கும் சோசலிச முறைமைக்கும் பொதுவான அதிகார வர்க்க ஆதிக்கமே வீபரின் பேதலிப்பு. ஏனெனில் இவ்விரு முறைமைகளுக்கும் அதிகார வர்க்கம் அவசியமானது. கட்டுப்பாடு மற்றும் ஒழுங்கு ஆகிய இரண்டுமே சம முக்கியத்துவம் வாய்ந்தது. எனவே பேதலிப்பு என்ற நிலை தானாகவே உருவாகி விடும். அதிகார வர்க்கம் இல்லையேல் முதலாளித்துவம் என்பது வரவே வராது. நிலையான, முறையான வரையறுக்கப்பட்ட நிர்வாகத்தின் தேவையை அதிகார வர்க்க பகுத்தறிவுத் தன்மை வலியுறுத்துகிறது. இது முதலாளித்துவத்திற்கு எதிர்மறை. எனவே அதிகார வர்க்கப் பகுத்தறிவுத் தன்மையே வேறாதலுக்கு வழி வகுக்கக்கூடியது. இது தனிப்பட்ட மனிதனுடைய கட்டுப்பாட்டிற்கு அப்பாற்பட்டது, வெளிமட்ட சக்தியாகச் செயல்படுகின்றது. இந்த பகுத்தறிவுத் தன்மையானது அதிகார வர்க்க ஆதிக்கத்திற்கு வழிவகுக்கக் கூடியது. பகுத்தறிவும், தொழில்நுட்பமும் ஒருங்கிணைந்து செயல்படவல்லது. இவற்றின் தாக்கம் சமூகத்தில் அதிகாரமாகின்றது. இவற்றின் தாக்கத்தில் தொழில்நுட்பமும் சேர்கின்றது. ஆயினும் சமூகத்தின் தாக்கம் மாறுதலுக்கு உட்பட்டது. இத்தாக்கத்தை மனிதன் கட்டுப்படுத்த இயலாததாயினும் அவற்றை தனது தேவைகளுக்கு பயன்படுத்த முடியும் என்கிறார் வீபர்.

ஹெர்பர்ட் மார்க்சு கருத்துக்களில் வீபரின் தொழில்நுட்ப வகைத் தீர்மானித்தல் இடம் பெற்றுள்ளது. பகுத்தறிவு தொழில் நுட்பமானது செயற்கையான (artificial) தேவைகள், பொதுமக்களின் பரந்த பயன்பாடு மற்றும் அடைய முடியாத இலட்சியங்கள் ஆகியவற்றை மக்கள் விரும்பி ஏற்கும் வகையில் வளர்ந்த தொழில் சமூகமாகும் என குறை கூறுகின்றார். முதலீடு மற்றும்

Scanned with CamScanner

உழைப்பு ஆகிய ஆதிக்கத் தன்மை முழுமையாக இச்சமூகத்தில் மறைக்கப்பட்டு விடும். பொய்யான உணர்வு ஒன்றுதான் நவீன மனிதனின் ஒரே வகை அறிவாக இருக்கும் என்கிறார். தொழில் நுட்பம் மற்றும் அதிகார வர்க்க மூத்தோர் குழாம் பொதுமக்கள் தொடர்பு சாதனங்களைத் தங்கள் கட்டுப்பாட்டில் வைத்துக் கொள்வர். பொருட்கள் பயன்பாடு செய்வதில் வேறுபாடுகள், சமூக ஆர்வங்கள், ஒய்வு போன்ற செயல்களில் மக்களிடையே உள்ள சமூக வித்தியாசங்கள் குறையும் என வீபர் கூறுகின்றார். பகுத்தறிவுக் கலாச்சாரம் முழுமையாகச் செயல்படும் போது, மார்க்சு எண்ணுகின்ற உழைப்பாளர்களின் புரட்சி என்பது மாயையாக இருக்குமே தவிர, நடைமுறைக்கு உகந்ததாக இருக்காது என்கிறார்.

உலக தொழிற்சாலை நாகரிகத்தில் மனிதனை மனிதனே ஆதிக்கப் படுத்தக் கூடிய நிலைமை வளரும். இதனால் மனிதன் உழைப்பாளியாக இருந்து அவனது உழைப்பின் மூலம் திருப்தி படக்கூடியவனாகத்தான் இருப்பானே தவிர, அவன் உழைப்பு ஒரு வேலையாக மாறும், அதனை அவனால் கட்டுப்படுத்த இயலாது. இவன் வேலை செய்யும் இயந்திரமாவான். இவன் வேலையை முடிவு செய்யும் மனிதனாக இருக்கமாட்டான். ஆனால் அவன் உயிர் வாழ அவ்வேலையை செய்ய வேண்டிய கட்டாயத்திற்குத் தள்ளப்படுவான் என்கிறார் மார்க்சு. மனிதன் தனக்காக மட்டும் வாழாமல், முன்னரே சமூகத்தில் நிர்ணயிக்கப்பட்ட சில பணிகளைச் செய்ய வேண்டியவனாக இருக்கிறான். ஆனால் அப்பணிகளில் பேதலிப்பு நிலை காணப்படுகின்றது. மனிதன் தனது உழைப்பை அவனால் உணர முடிவதில்லை. இவன் வாழ்வே உழைப்பின் காரணியாக மாறுகின்றது. இவனது உழைப்பும், உற்பத்தியும் அதிகாரமாக மாறுகின்றது என்கிறார்.

## 5.7 விமர்சனங்கள்

பேதலிப்பு கோட்பாடு பல கண்டனங்களுக்கு இலக்காகி உள்ளது. தற்கால நாகரீக சமூக வாழ்வைக் குறை கூறுவதாக இக்கோட்பாடு அமைந்துள்ளது. ஆனால் இக்கோட்பாடு முழுமையாக அனைத்துப் பிரச்சனைகளையும் ஆராயவில்லை. நாகரீக இன்றைய சமூகத்தில் மனிதன் போட்டா போட்டிக்குள்ளாகி இருக்கிறான் என்பதுவும், அவன் வாழ்வின் உண்மை நிலையை உணரவில்லை என்பது ஏற்புடையது. ஆயினும் இதுதான் பிரச்சனைக்கு முழுமையான காரணம் என்று கூறிவிட முடியாது. போட்டி சமூகத்தில் மோதல் என்பது பொதுவானது, ஒவ்வொருவரிடமும் ஏற்படக் கூடியது. பேதலிப்பு என்பது அம்மோதலில் வருவதில்லை, அம்மோதலில் வெற்றி பெற முடியாத காரணத்தால்தான் பேதலிப்பு நிலை உருவாகின்றது. இப்பேதலிப்பு நிலையை உணர்ந்து, நோக்கங்களை அடைய முயற்சிக்க வேண்டுமே தவிர, பேதலித்தலையே முழுமையாக நினைத்துக் கொண்டிருக்கக் கூடாது. ஒருவேளை இப்பேதலிப்பு வரவில்லையெனில், வாழ்வின் செயலே வித்தியாசமாகிவிடும்.

Scanned with CamScanner

அரசியல் பேதலிப்பு என்பது மார்க்சியக் கோட்பாடு என்பதை அறிவோம். இவர் ஹெகலிடமிருந்து இக்கோட்பாட்டை பெற்று, அரசியல் பொருளாதாரத்தின் மையக் கருத்தாகவே பேதலித்தலைக் கொண்டு வந்துள்ளார். உழைப்பை பேதலிப்பு என்பது மனிதன் தனது சுயவேலையிலிருந்து பேதலிப்பு என்ற கோட்பாடு பல பிரச்சனைகளை உருவாக்கியுள்ளது. தற்கால சமூக, உணர்ச்சி மிக்க தேவைகளை நிறைவு செய்யக் கூடிய வகையில் இவர் பேதலிப்பு கோட்பாடு அமையவில்லை. மாறாக, நடைமுறை ரீதியில் பேதலிப்பு கோட்பாட்டை மார்க்சு செயல்படுத்தவில்லை. கொள்கை அளவில்தான் விவரிப்புச் செய்துள்ளார். இன்றைய சோசலிச நாடுகளில் இவரது பேதலிப்பு கருத்து பொய்யாக்கப்பட்டுள்ளது. பேதலித்தலை உற்பத்திக் காரணியில் மட்டுமே இவர் கையாண்டுள்ளாரே தவிர, மனித ஆற்றல் மேம்பாட்டிற்கோ அல்லது அறநெறி மேம்பாட்டிற்கோ கையாளவில்லை. அரசியல் பேதலிப்பு கோட்பாட்டை இன்னும் முழுமையாக ஆய்வு செய்யவில்லை, கிடைக்கக் கூடய ஆதாரங்களின் அடிப்படையில்தான் நடைமுறையில் சில ஆய்வுகளே செய்யப்பட்டுள்ளன. மார்க்சின் கோட்பாடு இதில் அதிகம் இடம் பெற்றுள்ளதால் முழுமையான, சீரான, பொதுவான ஆய்வு நிகழ்த்தப்படவில்லை என்றே சொல்லலாம். தற்கால பிரச்சனைகளை ஆராய்ந்து, அதற்கேற்ற நிலையில், அனைவரும் பங்கேற்கும் வகையில் கோட்பாடுகள் உருவாக வேண்டும். மகாத்மா காந்தி போன்றோர் சமூகப் பிரச்சனைகளுக்குத் தீர்வு காணும் உத்திகள் பலவற்றைக் கூறியுள்ளார். மக்கள் சமூகத்தில் ஆக்கப்பூர்வ மகிழ்வோடும், அன்போடும், நட்போடும், பரஸ்பரமாகவும், அமைதி வழியாகவும் செயல்பட்டால் பேதலித்தலுக்கு இடமில்லை.

## தன் மதிப்பீட்டு வினாக்கள்

1. அரசியல் பேதலிப்புப் பற்றி ஆய்ந்துள்ள சில அறிஞர்களைக் குறிப்பிடுக.

______________________________

______________________________

______________________________

______________________________

2. பொருளாதார ரீதியிலான பேதலிப்பு என்பது என்ன ?

______________________________

______________________________

______________________________

______________________________

Scanned with CamScanner